<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE</u>
<u>(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.</u>
<u>DEPOSITION OF WITNESS</u>

MCOP.NO. - 167/2019

P.W.1 - **திரு.காத்தவராய கவுண்டர்**

DATE - 25.09.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.09.2025.

<u>ம.சா.1குறுக்கு விசாரணை-</u>

எனது மகன் விபத்தில் இறந்ததற்காக நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு நினைவில்லை. பெருமாள் பள்ளி அருகே பரதராமி அருகில் விபத்து ஏற்பட்டு இறந்தார். எனது மகன் பல்சர் வண்டியில் செல்லும் போது விபத்து ஏற்பட்டது. எனது மகனின் வண்டி என் எனக்கு நினைவில்லை. விபத்து ஏற்படுத்திய வண்டி லாரி. அதன் பதிவெண் எனக்கு தெரியாது. எனது மகன் இறக்கும் போது வயது 22 அதனால் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. லாரி டிரைவர் மீது மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எங்களுக்கும் 2ஆம் எதிரிமனுதாரருக்கும் நேரடியாக எவ்வித தொடர்வும் கிடையாது. எனது மகனுடைய வயது, வருமானம், தொழில் ஆகியவைகளை காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. விபத்தை நான் நேரடியாக பார்த்த சாட்சி இல்லை. நான் கோரியுள்ள தொகை அதிகப்படியானது. எனது மகனே இருசக்கர

வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் சாலையில் இடது ஓரமாக பாதுகாப்பு சமிக்கையோடு நின்று கொண்டிருந்த லாரி மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எனது மகனே விபத்து ஏற்படுத்தியதால் 2ஆம் எதிர் மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. எனது மகன் நின்று கொண்டிருந்த லாரி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதால் 2வது எதிர்மனுதாரர் தேவையில்லாத தரப்பினர் என்றால் சரியல்ல. 2ஆம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 25.09.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2025.09.25 18:33:05 +0530

Additional District Judge(FTC),

Vellore.